www.tamilarangam.net




## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

# பத்மநாபா படுகொலை உள்ளிருந்து போன தகவல்கள்

எழுதுவது அற்புதன்

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட எவரும் தமிழகத்துக்கு வரக்கூடாது என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியிருந்தார்.

"அவர்கள் இங்கு வந்தால் தங்களுக்குள் மோதிக் கொள்வார்கள். போராளிக் குழுக்களுக்கு இடையே மோதலைத் தவிர்க்கவே அவ்வாறு கூறுகிறேன்" என்றார் கலைஞர்.

உண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். மீது இருந்த கசப்பினாலும், புலிகள்மீது அவருக்கு ஏற்பட்டிருந்த அபிமானத்தாலுமே அவ்வாறு கூறியிருந்தார்.

ஆனால் தனது கூற்று தீர்க்கதரிசனமான கூற்றாக மாறப்போகிறது என்பதை அவரே அப்போது அறிந்திருக்கவில்லை.

இந்தியப் படை விமானத்தில் ஒரிசா சென்ற பத்மநாபா அங்கு தங்கிவிட்டு புறப்பட்டார்.

அவரது புறப்பாடு பற்றி இந்திய மத்திய அரசுக்கோ, அல்லது தமிழக அரசுக்கோ தெரிந்திருக்கவில்லை.

திடீர் திடீர் என்று ஏதாவது முடிவெடுப்பது என்பது பத்மநாபாவின் அணுகுமுறைகளில் ஒன்று. முக்கியமான சக தோழர்களது கருத்தையும் மீறி சில சமயங்களில் முடிவெடுக்கும் பழக்கம் இருந்தது.

சொந்த பாதுகாப்பு விடயத்திலும் இயக்க பாதுகாப்பை மீறி தனியாக மோட்டார் சைக்கிளில்கூடச் செல்வதுண்டு.

இதனை பிரபாகரனே ஒரு தடவை சுட்டிக்காட்டி 'தனியாகத் திரிய வேண்டாம்' என்று கூறியிருந்தார். அப்போது புலிகளுடன் ஐக்கியமாக இருந்த காலம்.

இந்தியப் படையுடன் இணைந்து புலிகளுடன் சவாலுக்கு நின்று, புலிகளால் குறிவைக்கப்பட்டது தெரிந்த பின்னரும் பத்மநாபா தனது பாதுகாப்பில் முன்னைய அலட்சியத்தை காட்டியதுதான் புலிகளின் குறிக்கு வாய்ப்பாக அமைந்தது.

அது மட்டுமன்றி இரகசியம் காப்பதில் கவனம் இல்லாத இயக்க நடவடிக்கைகளும் பத்மநாபா கொலைக்கு காரணமாக அமைந்தன.

### பின்னணி

பத்மநாபா கொலையின் பின்னணித் தகவல்களை இப்போது பார்க்கலாம்.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப்.இயக்கத்தின் காரியாலயம் சென்னை ஐக்காரியா காலனியில் இருந்தது.

அதன் அருகே இருந்த தொடர்மாடிக் கட்டடம் 'பவர் அப்பார்ட்மெண்ட்' என்று அழைக்கப்படும். அதன் அருகே இருந்த மற்றொரு அப்பார்ட்மெண்ட்டின் பெயர் கமலா அப்பார்ட்மெண்ட்.

பவர் அப்பார்ட்மெண்ட்டில் நாலு மாடிகள். நாலாவது மாடியில் இருந்த வீடொன்றை ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். பரந்தாமன் (ஞானம்) வாடகைக்கு அமர்த்தி தன் குடும்பத்தினருடன் தங்கியிருந்தார்.

பத்மநாபாவின் தனிப்பட்ட செயலாளராகவும் பரந்தாமன் பணியாற்றியதால் அவ்வீடும் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். இயக்க குட்டி அலுவலகம்போல மாறியது.

பத்மநாபா முதல் இயக்க முக்கியமான தோழர்கள் பலர் அங்கு சென்று வருவர். ஒரு தடவை 'ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப்., ஈரோஸ், ரெலோ ஆகிய மூன்று இயக்கங்களின் முதல் ஐக்கிய முயற்சிக் கூட்டமும் அந்த வீட்டில்தான் நடந்தது.

எனவே 1984 முதல் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். வீடு என்று மிகப் பிரபலமான வீடு அது.

இத்தனைக்கும் அந்த வீடு பாதுகாப்பு ரீதியில் ஆபத்தானது. முன்புற கதவைத் தவிர வேறு எந்த வழியும் வெளியேறிச் செல்வதற்கு கிடையாது.

குறிப்பிட்ட வீட்டை இயக்க நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டாம். என்று 1985ல் நடைபெற்ற இந்திய பிராந்தியக் கமிட்டிக் கூட்டத்தில் டேவிற்சன், மித்திரன், ரமேஷ் ஆகியோர் பத்மநாபாவிடம் நேரிலேயே விமர்சனம் தெரிவித்தனர். அக்கூட்டத்தில் வரதராஜப் பெருமாளும் அதே கருத்தையே கூறியிருந்தார்.

விமர்சனத்தை ஏற்றுக்கொண்டபோதும், அதனை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை.

இந்தியப்படை காலத்தில் பரந்தாமனும் குடும்பத்தினரும் கனடா சென்றுவிட, அவ்வீடு ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். பொறுப்பில் இருந்தது.

ஒரிசா சென்ற பத்மநாபா, வரதராஜப் பெருமாள் ஆகியோர் எப்படியாவது சென்னை வருவர். அப்படி வரும்போது தீர்த்துக் கட்டவேண்டும் என்று புலிகள் முடிவு செய்தனர்.

சென்னையில் இவர்களைத் தீர்த்துக் கட்டும் நடவடிக்கைக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொறுப்பு சிவராசனிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் உடுப்பிட்டி பொறுப்பாளராக இருந்தவர் சிவராசன். சந்திரசேகரம்பிள்ளை மாஸ்டரின் மகன். சண்டை ஒன்றில் ஒரு கண் பாதிக்கப்பட்டதால் ஒற்றைக்கண் சிவராசன் என்று அழைக்கப்பட்டார்.

### கண்காணிப்பு

சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அமைப்புக்கு என்று இரகசிய தங்குமிடங்கள் வேறு கிடையாது. இரகசியமாக இருந்தாலும் தமது நடவடிக்கை மூலம் ஒரு வாரத்திற்குள் பரகசியமாக்கிவிடுவர்.

பத்மநாபா, வரதராஜப்பெருமாள் ஆகியோர் சென்னை வந்தால் எங்கெங்கு செல்லக்கூடும் என்பதை அறிந்து அந்த பகுதிகளை சிவராசன் நேரில் சென்று கண்காணித்தார்.

பத்மநாபாவின் மனைவி ஆனந்தி. இந்தியப்படை காலத்திலேயே இவர்கள் திருமணம் நடந்தது. காதல் கல்யாணம்.

ஆனந்தி இந்தியாவில் கேரளத்தைச் சேர்ந்த பெண். அவரது வீடு சூளைமேடு வகாப் தெருவில் இருக்கிறது. அந்த வீட்டுக்கு சற்றுத் தள்ளித்தான் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அமைப்பின் முதலாவது சென்னைக் காரியாலயம் இருந்தது. அப்போது (1980 களில்)தான் காதல் மலர்ந்தது.



சிவராசன்

பத்மநாபா சென்னை வந்தால் ஆனந்தி வீட்டில் தங்கவேண்டும், அல்லது பவர் அப்பார்ட்மெண்ட்டுக்கு வந்து தங்க வேண்டும்.

பவர் அப்பார்ட்மெண்ட்டுக்கு முன்பாக உள்ள வீடொன்றில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ராஜசுலோசனா என்னும் பெண்மணி தங்கியிருந்தார்.

பழம் நழுவிப் பாலில் விழுந்த கதை போலாகிவிட்டது சிவராசனுக்கு.

அப்பெண்மணியை முன்பே தெரியும் என்பதால், அங்கு வந்துபோகும் சாக்கில் பவர் அப்பார்ட்மெண்ட் பகுதியையும், அங்கு மாடியில் உள்ள வீட்டையும் நோட்டமிட வாய்ப்பாகிவிட்டது.

அப்படி வந்து போன சிவராசனுக்கு இன்னொரு எதிர்பாராத சந்திப்புக் கிடைத்தது.

பவர் அப்பார்ட்மெண்டுக்கு அருகில் உள்ள கமலா அப்பார்ட்மெண்ட்டில் உடுப்பிட்டி இளைஞர் ஒருவர் தங்கியிருந்தார். சுதந்திர ராஜா என்பது அந்த இளைஞனின் பெயர். அவரைத்தான் ஏதேச்சையாக சந்தித்தார் சிவராசன்.

அந்த சுதந்திரராஜாதான் பின்னர் சின்ன சாந்தன் என்றழைக்கப்பட்டார்.

உடுப்பிட்டியில் இருந்தபோது புலிகள் இயக்க தீவிர அனுதாபியாக சிவராசனின் சகோதரருடன் சேர்ந்து திரிந்தவர் சின்ன சாந்தன்.

தொழில்நுட்ப கல்வி கற்பதற்காக சென்னை சென்று கமலா அப்பார்ட்மெண்டில் தங்கியிருந்தார்.

### உளவாளி

சின்ன சாந்தனைக் கண்டதும் அவருடன் சில சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொண்ட சிவராசன்: "அந்த வீட்டில் யார் இருக்கிறார்கள் தெரியுமா?" என்று ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். வீட்டை காண்பிக்க, சின்ன சாந்தனுக்கும் தெரிந்திருந்தது.

அந்த வீட்டை கண்காணிப்பது, பத்மநாபா, பெருமாள் ஆகியோர் வருகிறார்களா என்ற தகவலை அறிய ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். உறுப்பினர்களுடன் சேர்ந்து பழகுவது, தகவல்களை அவ்வப்போது தனக்கு தெரியப்படுத்துவது ஆகிய பொறுப்புக்களை சின்ன சாந்தனிடம் ஒப்படைத்தார் சிவராசன்.

தாராளமாகச் செலவு செய்வதற்கு வேண்டிய பணமும் சின்ன சாந்தனிடம் சிவராசனால் தரப்பட்டது.

ஐக்காரியா காலனி ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அலுவலகம், பவர் அப்பார்ட்மெண்ட் வீடு, கமலா அப்பார்ட்மெண்ட் ஆகியவை ஒரே பகுதிக்குள் அருகருகே இருந்தமையால் சின்ன சாந்தனுக்கு வேலை சுலபமானது.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். உறுப்பினர்களுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். கட்டைதாஸ் என்று அழைக்கப்படும் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். ஆதரவாளர் ஒருவர் இருந்தார். நாபா அவரை தன் விசுவாசி என்று நினைப்பார். ஆனால் அவரோ கதைக்கத் தொடங்கினால் முழுப் பொட்டுக் கேட்டையும் போட்டு உடைக்கக் கூடியவர்.

கட்டைதாஸ் உட்பட பலரும் சின்ன சாந்தனுக்கு நண்பர்களாகினர். 'தான் படிக்க வந்ததாகவும், பத்மநாபாவை ஒருதடவை பார்க்க ஆசை' என்றும் சின்ன சாந்தன் கூற, அவரைப் பார்க்க தாம் ஏற்பாடு செய்வதாக கட்டைதாஸ் போன்றோர் கூறினர்.

இதற்கிடையே சினிமா, மெரீனா பீச், ஹோட்டல்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். உறுப்பினர்கள் பலரை அழைத்துச் சென்று தாராளமாக செலவு செய்தார் சின்ன சாந்தன். தோழர்கள் குளிர்ந்து போனார்கள்.

அந்தக் குளிர்ச்சியிலேயே ஒருநாள் கூறிவிட்டார்கள்: "எஸ்.ஜி. விரைவில் இங்கு வருகிறார். நீங்கள் சந்திக்கலாம்."

செயலாளர் நாயகம் என்பதன் ஆங்கில அர்த்தத்தை சுருக்கி 'தோழர் எஸ்.ஜி' என்று சுருக்கமாகத்தான் பத்மநாபாவை அழைப்பதுண்டு.

ஆனந்தியின் தந்தையின் சஷ்டிய பூர்த்தி நிகழ்ச்சிக்காக பத்மநாபாவும் திருப்பதி செல்கிறார். அங்கிருந்து இங்குதான் வருவார்கள் என்ற தகவலும் கதையோடு கதையாக கூறப்பட்டுவிட்டது.

சின்ன சாந்தன்மீது அந்தளவு நம்பிக்கை, நெருக்கம்.

தகவல் சிவராசனுக்கு போனது. யாழுக்கு பொட்டு அம்மானுக்கு தகவல் அனுப்பப்பட்டது.

கறுப்பு டேவிட் தலைமையில் நான்குபேர் கொண்ட தாக்குதல் அணியை தமிழகத்துக்கு அனுப்பினார் பொட்டம்மான்.


கறுப்பு டேவிட், டானியல், ரவிச்சந்திரன், திலீபன் ஆகிய நான்குபேரே அந்த அணியில் சென்றனர். இவர்களை வழிநடத்தும் பொறுப்பு சிவராசனுக்கு.

அப்போது தமிழ்நாடு முழுக்க புலிகள் இயக்க பொறுப்பாளராக இருந்தவர் குண்டுச் சாந்தன். அவர் திருச்சியில் இருந்தார்.

பணி முடிந்ததும் தாக்குதல் அணியை பத்திரமாக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கும் பொறுப்பு குண்டுச் சாந்தனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

தாக்குதல் அணியினர் நால்வருக்கும் தாக்குதல் நடத்தப்படவேண்டிய இலக்கின் சமீபமாகவுள்ள சூளைமேடு கங்கை அம்மன் கோவில் வீதியில் உள்ள வீடொன்றை சிவராசன் ஏற்பாடு செய்திருந்தார். சினிமா விநியோகஸ்தர் ஜெயபாலசிங்கம் என்பவருக்கு சொந்தமான வீடு அது.

இத்தனை தயாரிப்புக்களுடன் தாக்குதல் அணி தனக்காக காத்திருக்க, பத்மநாபா திருப்பதியில் தன் மாமனாரின் சஷ்டிய பூர்த்தி பிரார்த்தனையை முடித்துக்கொண்டு மனைவி சகிதம் சென்னை வந்து சேர்ந்தார்.



குண்டுச் சாந்தன்

### அடையாளம்

1990 ஜூலை 19ம் திகதி மத்தியான நேரத்தில் பவர் அப்பார்ட்மெண்டில் உள்ள வீட்டுக்கு வந்து சேர்ந்தார் பத்மநாபா.

வரும்போது மனைவியை வகாப் தெரு வீட்டில் இறக்கிவிட்டே வந்தார்.

பத்மநாபா வந்துவிட்டார். மாலையில் வேறு எங்கோ செல்கிறார் என்ற தகவலும் சின்ன சாந்தனுக்கு கிடைத்தது.

உடனே சிவராசனுக்கு தகவல் பறந்தது.

அம்பாசிடர் காரில் தாக்குதல் அணியினர் நால்வரும் புறப்பட்டனர். காரை டானியல் செலுத்தினார்.

இதற்கிடையே பத்மநாபாவை காண ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். முக்கியஸ்தர்கள் பலர் அந்த வீட்டுக்குச் சென்றனர். பலரை கும்பலாக சந்திப்பதில் உள்ள ஆர்வம் அப்படியே பழகிப் பழகி பாதுகாப்பு அக்கறையை பறக்கச் செய்திருந்தது.

இத்தனைக்கும் அந்த வீட்டில் பத்மநாபாவுக்கு பாதுகாப்பாக ஒரே ஒரு பிஸ்டலுடன் மட்டுமே மெய்க்காப்பாளர் லிங்கம் தங்கியிருந்தார். வேறு ஆயுதங்கள் கிடையாது.

சுரேஸ் பிரேமச்சந்திரனும் வேறு சிலரும் அங்கு இருந்துவிட்டு வெளியே போன சில நிமிடங்களுக்குள் அம்பாசிடர் கார் பவர் அப்பார்ட்மெண்ட் வளாகத்திற்குள் புகுந்தது.

பத்மநாபா இருந்த வீட்டை சுலபமாக அடையாளம் காணக்கூடியதாகவும் இருந்தது. அலங்காரத்திற்காக கதவருகே குஞ்சம் கட்டப்பட்டிருந்தது.

'குஞ்சம் கட்டிய வீடு' என்று தாக்குதல் அணிக்கு அடையாளம் கூறி மேலே அனுப்புவதற்கு வசதியாகிவிட்டது.

### தாக்குதல்

காரில் இருந்து குதித்த நால்வரில் இரண்டுபேர் ஐக்காரியா காலனியில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அலுவலகம் நோக்கி சுடத் தொடங்கினார்கள். அங்கிருந்து பார்த்தால் அப்பார்ட்மெண்ட் தெரியும்.

உதவிக்கு யாரும் வரக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை கருதியே அலுவலகம் நோக்கி சுடப்பட்டது.

அதே நேரம் கறுப்பு டேவிட்டும் இன்னொருவரும் படிகளில் வேகமாக ஏறி நாலாவது மாடிக்கு சென்றுவிட்டனர்.

வெளியே சத்தம் கேட்டு கதவை மூட முன்பாக உள்ளே புகுந்தனர்.

எதிர்ப்பட்டவர்கள்மீது சரமாரியாக சுட்டுத் தீர்த்தனர்.


பையில் இருந்த பிஸ்டலை எடுக்க முற்பட்ட பத்மநாபாவின் மெய்க்காப்பாளர் சுடப்பட்டார். பிஸ்டலிலும் ஏ.கே.ரவைகள் பட்டிருந்தன.

பத்மநாபா பின்புற அறைப் பக்கம் சென்றுவிட்டார். ஆனால் அங்கிருந்து பின்புறமாக தப்பிக்க பாதை எதுவும் கிடையாது.

உள்ளே புகுந்தவர்கள் பத்மநாபாவை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.



இந்தியப்படைத் தளபதியுடன் பத்மநாபா மறுபுறம் பெருமாள்



சின்ன சாந்தன்

அதேவேகத்தில் திரும்பி கீழே சென்று காரில் ஏறித் தப்பிச் சென்றனர்.

செல்லும்போது காரின் இருபுறமும் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே சென்றதால் காலனி வாசிகள் பலர் காயமடைந்தனர். பொதுமக்கள் சிலர் பலியாகினர்.

வீட்டுக்குள் பத்மநாபா உட்பட பதின்மூன்றுபேர் பலியாகினர்.

வடக்கு-கிழக்கு மாகாண நிதி அமைச்சர் கிருபாகரன், யாழ் மாவட்ட எம்.பி. யோகசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். நீண்டகால உறுப்பினர் ரவி உட்பட பதின்மூன்று பேரே பலியாகினர். இரு பெண்களும் பலியாகினர்.

யோகச்சங்கரியும், கிருபாகரனும் 18.06.90 அன்றுதான் கொழும்பில் இருந்து விமானத்தில் சென்னை சென்றிருந்தனர்.

தாக்குதல் அணியினர் எப்படி தப்பனர்?

தமிழக அரசுக்கும் இக் கொலைக்கும் இடையே தொடர்பு இருந்ததா?

அவற்றை வரும் வாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்